திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லித் தான் பொது மக்கள் ஆடிட் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா ? அப்படி வந்த காரணத்தினால் இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பொதுவாக மக்களுக்கு அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேல் கல்வி அதிகாரிகள் சென்று அந்த அலுவலகக் கணக்குகளைத் தணிக்கை செய்திருக்கிறார்கள். அதிலே சில குறைபாடுகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை இயக்குநருக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் அவர்கள் உரியவர்களிடம் சமாதானமும் விளக்கமும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு சமா தானம் சரியாக இல்லாவிட்டால் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். நான் முதலிலே சொன்னமாதிரி ஆடிட் வகையில் கணக்குப் பார்க்கிறபொழுது சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப் பட்டன. அவர்கள் நடந்துகொண்ட விதத்தில் ஏதாவது முறை கேடாக செயல்பட்டிருப்பார்களானால், ஒழுங்குப்படுத்துகிற முறையில் அதைப்பற்றி தனியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

ஓமியோபதி மருந்தகங்கள்

*8 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருந்தகங்கள் நமது மாநிலத்தில் தற்போது எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

(இ) வியாதியஸ்தர்கள் தங்கி மருத்துவம் பெற படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகளை நிறுவ அரசு மேற்கொண்ட நடவடிக்கை கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இம்மாநிலத்தில் ஓமியோபதி மருந்தகங்கள் அரசினரால் இன்னும் ஏற்படுத்தப்பட வில்லை.

(இ) ஓமியோபதி மருத்துவக் கல்லூரியையும் மருத்துவ மனையையும் அரசே தொடங்குவதா அல்லது தமிழ்நாடு ஓமியோ பதி குழுவின் நிபந்தனைகளுக்குட்பட்டு அதனால் அங்கீகரிக்கப்பட

1973 ஆகஸ்டு 4]

வேண்டிய ஓமியோபதி மருத்துவ முறை கற்பிக்கும் தனியார் நிறுவனங்களே தொடங்குவதா என்பது பற்றி இன்னும் எல்லா வகையாலும் பரிசீலிக்க வேண்டியுள்ளது. மு.ப. 9-30

திரு. எம். சுரேந்திரன் : சார், ஓமியோபதி வைத்திய முறை எளிதாகவும் சீராகவும் ஏற்படுத்தப்பட்டால் அதன்மூலம் சாதாரண மக்களுக்கும் சிறந்தமுறையில் வைத்தியம் செய்ய பயன்படும் என்ற காரணத்தால், அரசாங்கம் இந்த ஓமியோபதி வைத்திய முறையை ஆங்காங்கே கிராமங்களிலும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓமியோபதி கவுன்சில் உருவாக்கப்பட்டு ஓராண்டு காலம் ஆகிறது. அதனுடைய சட்டத்திட்டங்களின் அடிப்படையில் விதிமுறைகள் உருவாக்கப்பட ஏறத்தாழ 8, 10 திங்கள் ஆகிவிட்டன. அதன்பிறகு அந்த நிபந்தனைகள் அச்சேற்றப்பெற்று, சரிபார்க்கப்பட்டு, வெளியிடப்பட்டிருக்கின்றன. அதன்படி சிகிச்சை அளிக்க விரும்புபவர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்து கொள்வதற்கு 10 ஆண்டு காலம் ஏற்கெனவே ஓமியோபதி துறையில் அனுபவம் பெற்றவர்கள் அல்லது முறைப்படி பயிற்சி பெற்றவர்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து சான்றிதழ் பெற்றவர்கள்—இவர்கள் தகுதி படைத்தவர்களாகின்றார்கள். அப்படி பதிவு செய்து கொண்டவர்கள் யார் யார் கிராமப்புறங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று பணிபுரிய விரும்புகிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். அதையெல்லாம் நன்றாக பரிசிலித்து செய்ய வேண்டியிருப்பதால் இந்த ஏற்பாட்டை கிராமப்புறங்களுக்கு விரிவுபடுத்த இன்னும் சிறிது காலம் ஆகும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, ஓமியோபதி வைத்திய முறையின் மூலமாக சிகிச்சைப்பெற்றால் நோய் குணமாக நீண்ட காலமாகிறது. அதனால் மக்கள் அதை அதிகமாக விரும்பவில்லை. மக்கள் விரும்பாத காரணத்தால் ஓமியோபதி மருத்துவ மனையை மூடிவிட வேண்டுமென்று எங்கள் பகுதியிலுள்ள நகராட்சி ஒரு தீர்மானத்தைப்போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. அதை மூடிவிடுவதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, "நோய் நாடி நோய்முதனாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் கூறியிருப்பதை எண்ணிப்பார்த்தால் சில நோய்கள் உடனடியாகத் தணிந்துவிட்டால் அது உடலுக்குக் கெடுதல் என்று தெரியும். அந்த நோய் நீண்டகாலம் இருந்து, முற்றிலும் குணமடைவதுதான் உடலுக்குப் பாதுகாப்பு. எல்லா நோய்களும் உடனடியாக தீர்ந்துவிடுவது நல்லது என்று சொல்ல முடியாது. தலைவலிக்கு மாத்திரை சாப்பிட போய் வேறு நோய்க்கு ஆட்பட வேண்டிவந்துவிட்டது என்று சிலர் சொல்வார்கள். அலோபதி முறையில் அப்படிப்பட்ட நிலை இல்லாமல் நீண்ட சிகிச்சைக்குப் பின்னால் குணம் கிடைக்கிறது. ஆகவே இந்த முறை தவறானது என்று சொல்லிவிடக் கூடாது. அதைப் பயன் படுத்துகிறவர்கள் அதிலே நம்பிக்கை வைக்கவேண்டும். அப்போது தான் இந்த மருத்துவமுறை மேலும் விரிவுபெற முடியும்; நாளடைவில் அதிகமான வரவேற்பு இருக்கும். ஆகவே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி நகராட்சி ஓமியோபதி மருத்துவ மனையை மூடிவிட அரசு உத்தேசிக்காது.

Mental Hospital at Madras

* 9. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state the details of the improvement proposed for the extension of the Kilpauk Government Mental Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கடுமையான மனநோய் உள்ள மனநோயாளிக்கென ரூ. 2.20 லட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றை 1973-74-ல் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இம்மாநிலத்திலே வேறு பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் வசதியாக இருக்கும்படியாக இந்த மனநோய் மருத்துவப் பிரிவு விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த மனநோய் மருத்துவப் பிரிவு பெரிய அளவில் அமைந்திருப்பது சென்னையில் கீழ்ப்பாக்கத்தில்தான். அதைப்போல் பெரிய அளவிலான ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டாலும் அது முடிவுபெற 8 அல்லது 10 ஆண்டுகள்